1970 நவம்பர் 28]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: சமூக நலத் துறை வாரியம் மூலமாகவும் நமது மாநில அரசாங்கத்தின் மகளிர் அமைப்புகள் மூலமாகவும் துப்புரவுப் பணி இதிலே விருப்பம் உள்ள மக்களை வைத்து செய்யப்பட்டு வருகிறது. இன்னும் கல்லூரி மாணவர்களை வைத்து துப்புரவு எப்படிச் செய்ய வேண்டுமென்று, சில பகுதிகளுக்குச் சென்று பயிற்சி அளிக்கப் பட்டு வருகிறது. கல்லூரி மாணவிகளை வைத்தும் இது செய்யப்படுகிறது.

Tamil Nadu Development Supplement

* 21 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether any Tamil Nadu Development Supplement was released in the press about 30th June 1969;

(b) the details thereof; and

(c) the cost of the publication?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) இல்லை.

(இ) & (உ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

சோழவந்தானில் உள்ள மனமகிழ் மன்றங்கள்.

* 22 வினா.—திரு. பி. எஸ். மணியன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டத்திலுள்ள சோழவந்தானில் Recreation Club -கள் எத்தனை உள்ளன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மனமகிழ் மன்றங்கள் மூன்று உள்ளன.

திரு. பி. எஸ். மணியன்: சோழவந்தானில் மாத்திரம் அல்ல. தமிழ் நாட்டில் இருக்கிற ரெக்ரியேஷன் கிளப்புகள் என்கிற பெயரால் நடத்தப்படுகிற இடங்களில் எல்லாம் சூதாட்டமும் சட்டத்திற்குப்புறம்பான செயல்களும் அதிகமாக நடைபெறுகிற காரணத்தால் அவைகளுக்குக் கொடுக்கப்படுகின்ற அனுமதியை ரத்து செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இவற்றிற்குக் கொடுத்திருக்கிற அனுமதி மத்திய அரசாங்க 1860 சங்கங்கள் பொதுச் சட்டத்தின் கீழ் 20-வது பிரிவின் கீழ் இவைகள் நிபந்தனை இல்லாமல் பதிவு செய்யப்படுகின்றன. சூதாட்ட இடங்களாக இருப்பதைப் போலீசார் கண்காணித்து நடவடிக்கை எடுக்கிறார்கள். லைசென்சை ரத்து செய்ய முடியாத நிலையிலே அதற்கு மத்திய அரசை வற்புறுத்தி இதை ஒழுங்குபடுத்தும் செயற்குறிப்பு அரசாங்கத்தின் ஆலோசனையில் உள்ளது.

திரு. கே. விநாயகம்: இந்த ரிக்ரியேஷன் கிளப்புகள் என்று சொல்லப்படுகிற அடிப்படையிலே, சென்னையிலே கட்சிக்காரர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு அதிகமான அளவு லைசென்ஸ் கொடுக்கப்பட்

டிருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா? இத்தனை மணிக்கு மேல் விளக்குகள் எரியக் கூடாது என்று இருந்தும் இரவெல்லாம் விளக்குப் போட்டுக்கொண்டு திறந்து வைத்துக் கொண்டு அங்கே சூதாட்டம் நடைபெறுகிறது என்பது அமைச்சருக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: கட்சிக்காரர்கள் ஆட்சிக்கு வந்தபிறகுதான் நடவடிக்கை எடுக்க முடியும். எப்போதும் கட்சி தான் ஆட்சிக்கு வரும். அவர்கள் எந்தக் கட்சியைப்பற்றிக் கூறுகிறார்கள் என்று புரியவில்லை. மனமகிழ்மன்றத்தின் சூதாட்டம் மட்டுமல்ல, அரசியல் சூதாட்டங்களும் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கின்றன.

Thiru T. MARTIN: When the clubs make application for registration they will have to state in the applications the objects for which the club is being started. May I know from the Hon. Chief Minister whether the Registrar looks into the objects and then grant registration or whether the clubs themselves have asked for permission for gambling and permission for gambling was given?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அவைகளை நிபந்தனை இல்லாமல் பதிவு செய்யவேண்டுமென்று 1860 சங்கங்களுடைய பதிவுச் சட்டத்தின் 20-வது பிரிவு கூறுகிறது. ஆகவே, நிபந்தனை எதுவும் விதிக்க முடியாது. பதிவை ரத்து செய்வதற்கு வழி இல்லை. மாநில அரசு திருத்துவதற்கு யோசனை செய்து கொண்டிருக்கிறது என்று முன்னாலே நான் குறிப்பிட்டேன்.

Complaint against Raffle Agent in Tirunelveli

*41 *Q.*—THIRU T. MARTIN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any petition, dated 7th February 1970 has been received from the public by the Chief Minister, Director of Tamil Nadu Raffle Schems and District Collector of Tirunelveli regarding the violations of Tamil Nadu Raffle Scheme by the authorised agent, Tamil Nadu Raffle Scheme Licence No. 35, Tirunelveli Junction; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) ஆம். தேதிபோடாத மனு ஒன்று 12—2—1970 அன்று தமிழ்நாடு அரசுப் பரிசுச் சீட்டு இயக்குநரால் பெறப்பட்டது.

(இ) பரிசுச் சீட்டு ஏஜண்ட் மீது நடவடிக்கை ஏன் எடுக்கக் கூடாது என்று காரணம் காட்டுமாறு அறிவிப்பொன்று அவருக்கு அனுப்பப்பட்டது. அவரது விளக்கம் பரிசீலனை செய்யப்பட்டபின், கூட்டுமுறை மூலம் விற்கப்பட்ட பரிசுச் சீட்டுகள் குறித்து மிகையாக வசூலிக்கப்பட்ட தொகைக்கு என ரூ. 84 (ரூபாய் எண்பத்தி நான்கு மட்டும்) அவர் செலுத்தவேண்டுமென்று கட்டளையிடப்பட்டது. அந்த ஏஜண்ட் 24—6—1970 நாளிட்ட 1733 செலுத்துச் சீட்டு எண்ணில் அத்தொகையை அரசுக் கருவூலத்தில் செலுத்தினர்.